රාජ්‍ය පරිපාලන, ස්වදේශ කටයුතු, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
**Ministry of Public Administration, Home Affairs, Provincial Councils and Local Government**

ඒකාබද්ධ සේවා අංශය | **இணைந்த சேவைகள் பிரிவு** | **COMBINED SERVICES DIVISION**

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. | சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. | Independence Square, Colombo 07, Sri Lanka

| දුරකතන<br>தொலைபேசி:**(94) 011- 2694560**<br>Telephone | ෆැක්ස්<br>தொலைநகல்:**(94) 011- 2692254**<br>Fax | ඊ-මේල්<br>மின்னஞ்சல்:**dgcs@pubad.gov.lk**<br>E-mail | වෙබ් අඩවිය<br>இணையத்தளம்: **www.pubad.gov.lk**<br>Web Site |
|---|---|---|---|

| මගේ අංකය<br>எனது இல<br>My No | CS/DOS/Policy/03/04 | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No | | දිනය<br>திகதி:<br>Date | 2023.01.05 |
|---|---|---|---|---|---|

அமைச்சுக்களின் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்ட செயலாளர்கள்
பிரதேச செயலாளர்கள்

**<u>இணைந்த சேவையின் கீழ் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியொன்றை வகித்து மற்றொரு பதவிக்கு விடுவிக்கப்பட்டு, மீண்டும் இணைந்த சேவையின் கீழ் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியொன்றுக்கு திரும்பி வரும் போது முன்னைய சேவைக் காலத்தை தற்போதைய சேவைக் காலத்துடன் சேர்ப்பதற்காகச் செய்யப்படும் கோரிக்கைகள்</u>**

இணைந்த சேவைக்குரிய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அரச சேவையில் மற்றொரு பதவிக்கு நியமனம் பெற்று புதிய பதவியில் கடமையைப் பொறுப்பேற்றதன் பின்னர் மீண்டும் இணைந்த சேவையின் கீழ் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு திரும்பி வருவதன் அடிப்படையில் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் முன்னைய சேவைக் காலத்தை மீண்டும் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு வரும் போதான சேவைக் காலத்துடன் சேர்ப்பது தொடர்பில் அடிக்கடி மேன்முறையீடுகள் சமர்ப்பிக்கப்படுவதாக அவதானிக்கப்பட்டுள்ளது. அத்தகைய சந்தர்ப்பங்ளில் உத்தியோகத்தர் முறையாக அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையிலிருந்து விடுக்கப்பட்டுள்ள மற்றும் விடுவிக்கும் செயற்பாடுகள் முறையாக மேற்கொள்ளப்பட்டிராத சந்தர்ப்பங்களும் காணப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான உத்தியோகத்தர்கள் மீண்டும் இணைந்த சேவைக்குரிய அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் பதவியொன்றுக்கு திரும்பி வருவதற்குச் செய்யும் கோரிக்கைகள் தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய தீர்மானமானது, அரச சேவை ஆணைக்குழுச் செயலாளரின் PSC/EST/08-05/02/2014 ஆம் இலக்கத்தையும் 2017.09.29 ஆம் திகதியையும் கொண்ட அரச சேவை ஆணைக்குழுச் சுற்றறிக்கை 03/2017 க்கு இணங்கவே நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அதற்கிணங்க மீண்டும் இணைந்த சேவையின் கீழ் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின்

பதவியொன்றுக்கு திரும்பி வருவதற்குச் செய்யப்படும் கோரிக்கைகள் எனது சிபாரிசுடன் அரச சேவை ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட வேண்டும்.

02. அதனால், அரச சேவையின் அல்லது அரச சேவைக்குப் புறம்பான வேறு பதவியொன்றிற்கு நியமனம் பெற்று கடமைகளைப் பொறுப்பேற்பதற்கு உத்தியோகத்தர்கள் இருப்பின், உரிய முறையில் அரச சேவை ஆணைக்குழுவின் செயலொழுங்கு விதிக் கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையிலிருந்து முறையாக விடுவித்துக்கொள்வதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டியிருப்பதனால் உத்தியோகத்தரின் கோரிக்கையையும் உரிய ஆவணங்களையும் எனக்கு விரைவாக அனுப்ப வேண்டும் என்று பணிவுடன் அறியத் தருகின்றேன்.

03. அவ்வாறு விடுவிக்கப்படும் உத்தியோகத்தர்கள் மீண்டும் இணைந்த சேவையின் கீழ் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு வருவதற்குச் செய்யும் மேன்முறையீடுகள் தொடர்பில் அரச சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களைப் பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபோது, அரச சேவை ஆணைக்குழுச் செயலாளரின் PSC/EST/08-05/01/2022 ஆம் இலக்க 2022.03.18 ஆம் திகதிய மூலம் கிடைக்கப் பெற்ற தீர்மானங்கள் மற்றும் அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு முன்னைய சேவைக் காலத்திற்கான சம்பள ஏற்றங்களை வழங்குவதற்கான சாத்தியம் தொடர்பில் தாபனப் பணிப்பாளர் நாயகத்தின் EST 5/5/15-Vol I ஆம் இலக்க 2022.07.27 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் பின்வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

I. 19/2019 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்ட தாபனவிதிக் கோவையின் I ஆகும் தொகுதியின் VII ஆம் அத்தியாயத்தின் 6.3 ஆம் உப பிரிவிற்கு இணங்க உத்தியோகத்தரொருவர் முன்னர் வகித்த பதவிக்கு அல்லது தரத்திற்கு மீண்டும் நியமிக்கப்பட்டால் அவ்வாறு வழங்கப்படும் நியமனத்தை ஒரு புதிய நியமனமாகக் கருதி மீள நியமிக்கப்பட்ட பதவிக்குரிய சம்பளத் திட்டத்தில் உத்தியோகத்தர் இறுதியாக சேவையாற்றிய வகுப்புக்குரிய/ தரத்திற்குரிய ஆரம்பச் சம்பளத்தை உத்தியோகத்தருக்குச் செலுத்த வேண்டும் என்பதுடன் அந்தச் சந்தர்ப்பத்தில் அந்த அத்தியாயத்தின் 9 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க சம்பள ஏற்றங்களுக்கான பயன்கள் வழங்கப்படலாகாது.

II. உத்தியோகத்தர் விடுவிக்கப்படுவதற்கு முன்னர் முன்னைய சேவையில் பெற்ற மருத்துவ பரிசோதனை அறிக்கையை புதிய நியமனமாக ஆட்சேர்ப்புச் செய்யும் போது சேவைத் தேவைப்பாட்டுக்கு இணங்க ஏற்புடையதாக்க முடியும்

III. உத்தியோகத்தரை விடுவிப்பதற்கு முன்னர் முன்னைய சேவையில் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைகளையும் அரசகரும மொழித் தேர்ச்சியையும் பூர்த்தி செய்திருந்தால் மீண்டும் அந்த தேவைப்பாடுகளைப்

பூர்த்தி செய்வதற்காக பரீட்சைக்குத் தோற்றுமாறு பணிக்க வேண்டிய அவசியமில்லை

IV. உத்தியோகத்தர் முறையாக சேவையிலிருந்து விடுவிக்கப்படுவதற்கு முன்னர் சேவையில் நிரந்தரமாக்கப்பட்டிருப்பின், தகுதிகாண் காலத்தைக் கவனத்திற்கொள்ளாது சேவையில் நிரந்தரமாக்க முடியும் என்றும் விடுவிக்கப்படுவதற்கு முன்னர் சேவையில் நிரந்தரமாக்கப்பட்டிராவிட்டால் புதிய நியமனத் திகதியிலிருந்து மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்ட வகையில் சேவையில் நிரந்தரமாக்க முடியும்

V. உத்தியோகத்தரை மீண்டும் சேவையில் சேர்க்கும் போது அரச சேவை ஆணைக்குழுவின் 03/2017 ஆம் இலக்கச் சுற்றறிக்கைக்கு இணங்க ஒரு புதிய நியமனமாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதனால் பதவியுயர்வுகளுக்கு முன்னைய சேவைக் காலத்தை ஏற்புடையதாக்க முடியாது

04. இவ்வாறான உத்தியோகத்தர்கள் ஓய்வுபெறும் சந்தர்ப்பத்தில் ஓய்வூதியம் தயாரிக்கும் நோக்கத்திற்காக உத்தியோகத்தர்களின் முன்னைய சேவைக் காலத்தை சேர்க்க முடியும் என்றும் அவர்களால் சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கும் போது மேற்படி விடயங்கள் தொடர்பில் கவனத்தில் எடுக்குமாறும் அறியத் தருகின்றேன்.

ஒப்பம்./ எஸ். ஆலோகபண்டார
இணைந்த சேவை பணிப்பாளர் நாயகம்